StudentBounty.com

# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM

## SUMMATIVE ASSESSMENT –II ( MARCH -2014 )

## TAMIL – CLASS –VII

## தமிழ்

**Time :- 3 Hours** | **Maximum Marks :- 90**

நேரம் :- 3 மணி | மதிப்பெண்கள் :- 90

---

பகுதி -1

அ. <u>கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க :</u>

ஒவ்வொருவரும் தன் வாழ்வில் எல்லா நலன்களையும் பெற முயற்சி செய்தல் வேண்டும். முயற்சி இல்லா மனிதன் செத்த பிணத்திற்கு ஒப்பாக கருதப்படுவான். முயன்றால் முடியாதது இவ்வுலகில் எதுவுமில்லை. முயற்சியைப் பற்றி வள்ளுவர் ,

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை

இன்மை புகுத்தி விடும்"

என்றார். வாழ்வு என்பதே போராட்டம்.அதில் வெற்றி பெற முயல வேண்டும்.முயற்சி உடையவர்கள் தனது துன்பத்தைப் போக்கிக் கொள்வதுடன் ,தனது உற்றார் , உறவினரின் துன்பத்தையும் சேர்த்து போக்கக் கூடியவர்கள்.முயற்சி இல்லாவிட்டால் வறுமையுடன் , தன் வாழ்வு என்னும் போராட்டத்தில் தோல்வியுற்று இழிவையும் , பழியையும் தேடிக் கொள்ள வேண்டியது வரும்.சிலர் அதிர்ஷ்டம் இருந்தால் போதும் என்பர்.அதிர்ஷ்டம் என்பது கண்ணுக்குப் புலப்படாதவை.முயற்சியும் ,பயிற்சியும் பெற்ற மனிதருக்கே அதிர்ஷ்டம் வந்து சேரும். அதிர்ஷ்டம் உடையவன் முயற்சிகள் பல செய்வான்.

<u>வினாக்கள் :-</u> **5 x 2 =10**

1. முயற்சி உடையவர்கள் எப்படிப்பட்டவர்கள் ?

2. முயற்சி இல்லாதவன் எதற்கு ஒப்பாக கருதப்படுகிறான் ?

3. முயற்சி இல்லாதவர் பெறும் துன்பம் யாது ?

4. அதிர்ஷ்டம் என்பது என்ன ?எம்மனிதருக்கு அதிர்ஷ்டம் தேடி வரும் ?

5. முயற்சி பற்றிய குறட்பா யாது ?

ஆ. <u>பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு கட்டுரை எழுதுக.</u> **1 x 8 =8**

1. நான் விரும்பும் கவிஞர்

2. நூல் நிலையம்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

இ. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு கடிதம் எழுதுக. 1 x 8 =8

1.குடிநீர் வசதி வேண்டி பஞ்சாயத்துத் தலைவருக்குக் கடிதம் எழுதுக.

2.விடுமுறையைக் கழிக்க வருமாறு தோழன்/தோழிக்குக் கடிதம் எழுதுக.

## பகுதி -2

இலக்கணம் :- 15 x 1 =15

அ.பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1.முன்பின்னாகத் தொக்க போலி

அ.அரைசன் ஆ.அஞ்சு இ.இலைஞ்சி ஈ.முன்றில்

2.சினைப்பெயர்

அ.கப்பல் ஆ.கபாலம் இ.மைதானம் ஈ.தண்ணீர்

3.வினை மரபுச் சொல்

அ.கூரை வேய் ஆ.புறா குனுகும் இ.தென்னம்பிள்ளை ஈ.நாய் குரைக்கும்

ஆ.பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

4.மரபுச் சொற்களைத் தவிர்த்துப் பிற சொற்களைப் பயன்படுத்துதல் ________ எனப்படும்.

அ.பிறமொழிச் சொல் ஆ.மரபு வழு இ.முற்றுப் போலி ஈ.காலப் பெயர்

5.போலி ____________ வகைப்படும்.

அ.மூன்று ஆ.நான்கு இ.ஐந்து ஈ.ஆறு

6.ஒரு செயலின் பெயரைக் குறிப்பது ____________ எனப்படும்.

அ.இடப்பெயர் ஆ.சினைப்பெயர் இ.பண்புப்பெயர் ஈ.தொழிற்பெயர்

இ.அடைப்புக்குள் கூறியவாறு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.

7.நிலம் (போலி ஆக்குக)

அ.நிலவு ஆ.நிலன் இ.நீலம் ஈ.நிலமடந்தை

8.நான் திருச்சி சென்றேன் (இடப்பெயரை எடுத்து எழுதுக)

அ.சென்றேன் ஆ.நான் இ.திருச்சி ஈ.செல்லவில்லை



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

9.கிளி அகவும் (மரபுவழு நீக்கி எழுதுக)

அ.கிளி பேசும் ஆ.கிளி கொஞ்சும் இ.கிளி பாடும் ஈ.கிளி குனுகும்

ஈ.<u>தகுந்த இலக்கணக் குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u>

10.சிப்பாய்

அ.தமிழ்ச் சொல் ஆ.ஆங்கிலச் சொல் இ.பிறமொழிச் சொல் ஈ.மரபுச் சொல்

11.பந்தர்

அ.முதற்போலி ஆ.இடைப்போலி இ.கடைப்போலி ஈ.முற்றுப்போலி

12.கருமை

அ.சினைப்பெயர் ஆ.காலப்பெயர் இ.தொழிற்பெயர் ஈ.பண்புப்பெயர்

உ.<u>சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u>

13.அ.குமாஸ்தா என்பதன் தமிழ்ச்சொல் - இராணுவ வீரன்

ஆ.குமாஸ்தா என்பதன் தமிழ்ச்சொல் - தபால்காரன்

இ.குமாஸ்தா என்பதன் தமிழ்ச்சொல் - எழுத்தர்

ஈ. குமாஸ்தா என்பதன் தமிழ்ச்சொல் - தந்தை

14.அ.கமுகக் கூந்தல் - மரபுப் பிழை

ஆ.கமுகக் கூந்தல் - மரபுச் சொல்

இ.கமுகக் கூந்தல் - பிறமொழிச் சொல்

ஈ.கமுகக் கூந்தல் - தானியம்

15.அ.ஈற்றுப் போலி என்பது முதற்போலி

ஆ.ஈற்றுப் போலி என்பது இடைப் போலி

இ.ஈற்றுப் போலி என்பது கடைப் போலி

ஈ.ஈற்றுப் போலி என்பது முன்பின்னாகத் தொக்க போலி



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

## பகுதி -3

அ. <u>பொருள் கூறுக.</u> 4 x 1 =4

1. கவளம் 2. பதாகை 3. எள்ளாமை 4. முற்றுகை

ஆ. <u>பிரித்து எழுதுக.</u> 3 x 1 =3

1. கொக்கொக்க 2. விழிப்புணர்வு 3. ஆங்கது

இ. <u>நிரப்புக.</u> 2 x 1 =2

1. முட்டுவலி நீக்கும் கீரையின் பெயர் ____________

2. நீதிநெறி விளக்கத்தின் ஆசிரியர் ____________

ஈ. <u>வாக்கியத்தில் அமைக்க.</u> 2 x 1 =2

1. சோம்பல் 2. விருப்பம்

உ. <u>உரிய இணைப்பைச் சொல் சேர்த்து எழுதுக.</u> 2 x 1 =2

1. மழை பொழிந்தது ; புற்கள் தழைத்தன.

2. நான் இன்று பள்ளிக்குச் செல்லவில்லை ; எனக்கு உடல் நலமில்லை

## பகுதி -4

அ. <u>பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து , கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u> 5 x 1 =5

"பெருவலி படைத்த தகையீரே ! உங்கள் நால்வகை படைகளின் வீரத்தை நானிலமே அறியும். ஆனாலும் இப்போரினால் துயரப்படப்போவது யார்? உங்களுக்குள் பகை வேண்டா. பகையால் நாடும் நாட்டு மக்களும் அடையும் துயர் சொல்லில் அடங்காது. சிந்திப்பீர் ! வேற்றுமையை வேரறுத்து ஒற்றுமைக்கு உரமளிப்பீர். ஒற்றுமையால் உங்கள் இருவரின் வலிமை கூடுமன்றோ? போரைத் தவிர்த்திடுக. நலங்கிள்ளியும் உணர்வான். நானே நேரில் சென்று கூறுகிறேன் " என்றார் கோவூர்கிழார்.

<u>வினாக்கள்</u>

1. போரினால் துயரப்படக்கூடியவர்கள் -

அ. மன்னர்கள் ஆ. மக்கள் இ. படை வீரர்கள்

2. ஒற்றுமை என்பதன் எதிர்ச்சொல் -



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

அ.ஒன்றுபடு ஆ.வேரறு இ.வேற்றுமை

3.கோவூர்கிழார் கூறிய மன்னரின் படைகளின் எண்ணிக்கை –

அ.மூன்று ஆ.நான்கு இ.ஐந்து

4.மேலே உள்ள கூற்று யாரிடம் சொல்லப்பட்டது ?

அ.அமைச்சர் ஆ.நலங்கிள்ளி இ.நெடுங்கிள்ளி

5.கோவூர்கிழார் என்பவர் ஒரு ____________

அ.படைத்தலைவர் ஆ.புலவர் இ.ஒற்றர்

ஆ.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 x 1 =5

1.சிற்றுளியால் தகரக் கூடியது

அ.கொல்லன் உலை ஆ.பெரிய மலை இ.தங்கம்

2.கொழுத்தவனுக்குரிய மரபு வகை உணவு

அ.பரோட்டா ஆ.எள்ளு இ.கொள்ளு

3.ஞாலம் என்பது இதனைக் குறிக்கும்

அ.அறிவு ஆ.உலகம் இ.ஊர்

4.இளந்தத்தனார் மீது சாற்றப்பட்ட குற்றம்

அ.ஒற்றர் ஆ.பகைவர் இ.தீயவர்

5.உறையூரை ஆண்ட மன்னன்

அ.சேரமான் ஆ.நலங்கிள்ளி இ.நெடுங்கிள்ளி

இ.எவையேனும் நான்கனுக்கு குறுகிய விடை தருக. 4 x 3 =12

1.மரபுவகை உணவுகளை உண்ணாததால் ஏற்படும் தீமைகள் யாவை ?

2.பெருமைக் குணம் - சிறுமைக் குணம் உடையவர்களை வேறுபடுத்துக.

3.நெடுங்கிள்ளி இளந்தத்தனாரிடம் கூறியவை யாவை ?

4.பனை மரத்திலிருந்து கிடைக்கும் உணவுப் பொருட்கள் யாவை ?

5.மூவேந்தர் யாவர் ? அவர்களின் கொடிகள் யாவை ?



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

ஈ.<u>அடிபிறழாமல் எழுதுக.</u> 2+2+4 =8

1.'சொல்லுதல்' எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக.

2.'வியந்து' என முடியும் குறட்பாவை எழுதுக.

3.'மெய் வருத்தம்' என்னும் நீதிநெறி விளக்கப் பாடலை எழுதுக.

உ.<u>பின்வரும் தலைப்புகளில் ஒன்றிற்கு மட்டும் துணைப்பாடக் கட்டுரை எழுதுக.</u> 1 x 6 =6

1.வெற்றியின் முதற்படி

2.தெனாலிராமன் செய்த நகைச்சுவை

****************************



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers